செய்தி வெளியீடு எண்:125 நாள் : 25.02.2016

## செய்தி வெளியீடு

தூத்துக்குடி மாவட்டம், அம்பலச்சேரி கிராமத்தைச் சேர்ந்த 10 பேர் ஆன்மிக சுற்றுலா சென்ற போது, திருவண்ணாமலையிலிருந்து திருப்பதிக்கு செல்லும் வழியில் சித்தூர் மாவட்டம் ரங்கம்பட்டி சுங்கச் சாவடியில் ஆந்திர செம்மரக் கடத்தல் பிரிவு வனத்துறையினரால் கைது செய்யப்பட்டு, 16.02.2016 முதல் சித்தூர் சிறையில் அடைத்து வைக்கப்பட்டனர். இவர்களது உறவினர்கள் சித்தூர் சிறையில் உள்ள அப்பாவி தமிழர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு அரசைக் கேட்டுக்கொண்டார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், அரசு வழக்கறிஞர்கள் திருவாளர்கள் அருள் மற்றும் முகமது ரியாஸ் ஆகியோரை திருப்பதிக்கு அனுப்பி, சிறையில் உள்ள தமிழர்களை பிணையில் விடுவிக்க ஏற்பாடு செய்ய உத்தரவிட்டார்கள். அதன்படி, அரசு வழக்குரைஞர்கள், திருப்பதியில் உள்ள வழக்கறிஞர்களுடன் இணைந்து சித்தூர் சிறையில் அடைத்து வைக்கப்பட்டுள்ள 10 தமிழர்களை பிணையில் விடுவிக்க நடவடிக்கை எடுத்தனர். இன்று (25.02.2016) திருப்பதி 5 வது கூடுதல் குற்றவியல் அமர்வு நீதிமன்றம் இந்த 10 தமிழர்களை பிணையில் விடுவிக்க உத்திரவிட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் எடுத்த நடவடிக்கை காரணமாக தூத்துக்குடியைச் சேர்ந்த 10 தமிழர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

*******

வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 600009.
நாள்: 25.2.2016